
# வள்ளலார் கண்ட சுத்தசன்மார்க்கம்

## பாடமும் - பயிற்சியும்

APJ. அருள்

❖ வெளியீடு ❖
கருணைபதிப்பகம்,
மதுரை - 625 107.



அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி



E-mail : karunaijournal@gmail.com

# "கருணை இதழ்"

சுத்த சன்மார்க்க நெறியை உள்ளது
உள்ளபடியே பரப்பும் ஒரே இதழ்

**ஆண்டுச் சந்தா ரூ. 50.00 மட்டும்**

**Bank : SBI., Othakadai, Madurai - 625 107**

**In favour of KARUNAI A/c. No. 31599470881**

**Branch Code : 2246**

**IFSC Code : SBIN0002246**

**www.facebook.com/vallalarkarunai**
**www.atruegod.org**
**www.vallalarspace.com/karunaisabaisalai**
**E-mail : apjarul1@gmail.com**

மதுரை கருணைசபை சாலை அறக்கட்டளை
வாரந்தோறும் ஞாயிறு மாலை நடத்தும்
நல்ல விசாரணைக் கூட்டத்தில்
அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வள்ளலார் கண்ட சுத்தசன்மார்க்கம் பாடமும்-பயிற்சியும் |
| முதற்பதிப்பு | : | 5-10-2016, வள்ளலார் பிறந்த நாள் |
| பதிப்புரிமை | : | கருணை இதழ்<br>34, கிரேஸ் ஹால்,<br>பூம்புகார்நகர் வடக்கு விரிவாக்கம்,<br>உத்தங்குடி, மதுரை - 625 107. |
| ஆக்கம் | : | திருமிகு. ஏ.பி.ஜெ. அருள் |
| மின்னஞ்சல் | : | apjarul1@gmail.com |
| வெளியீடு | : | கருணை பதிப்பகம், மதுரை. |
| பக்கங்கள் | : | 40 பக்கம், 2000 பிரதிகள் |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்து | : | 12 புள்ளிகள் |
| பேப்பர் தரம் | : | White Printing |

விலை : ரூ. 10/-

## அணிந்துரை



**அ.கதிரேசன்**
தொழிலதிபர், சமூக ஆர்வலர்
அண்ணாமலை அன் கோ
B1/4, M.I.G. காலனி, அண்ணா நகர்,
மதுரை-625 020

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் 19ம் நூற்றாண்டில் ஒரு புதிய மார்க்கத்தை தோற்றுவித்து நமக்கு வெளிப்படுத்தி உள்ளார்கள். ஆனால் வள்ளற்பெருமானை மதிப்பவர்கள் மற்றும் வணங்குபவர்கள் பலர் அவரை சமய நெறியிலேயே தொடர்ந்து காட்டுகிறார்கள். அவர் வாழ்ந்த காலத்திலும் அவரின் புதிய தனி நெறியை தெரிந்தவர்கள் இல்லை.அதனால் தான் உண்மை சொல்ல புகுந்தாலும் தெரிந்துக்கொள்வாரில்லை என்று அன்றே பெருமான் சொல்லியுள்ளார்கள்.

கருணை சபை சாலை முன்பு வெளியிடப்பட்ட புத்தகங்கள் வாயிலாக தான் நானும் வள்ளற்பெருமானின் தனி பொது நெறியை அறிந்துக்கொண்டேன். கருணை சபை, அதன் நிறுவநர் திருமதி. இராமலெட்சுமி இளங்கோ, அவர்தம் குடும்பத்தார்கள், நண்பர்கள் இம்மார்க்கத்தில் உண்மையாக இருந்து ஆற்றும் பணிகள் அளவிடமுடியாது. சுத்தசன்மார்க்க நெறியை உள்ளது உள்ளபடியாக வெளிப்படுவதற்கு மேதகு நீதிமன்றத்தில் பல வழக்குகள் தொடர்ந்து உள்ளார்கள். இந்திய அரசமைப்புச் சட்டம் 51A(g) படி உயிர்களிடம் பரிவுகாட்டிடல் வேண்டும் என்ற அடிப்படையில் அரசு விழாவில் அசைவ உணவு கூடாது என்ற அவர்களது போராட்டம் பாராட்டுக்குரியது. இந்த சிறிய நூலில் அவர்கள் வழங்கியுள்ள நல்ல விசாரணை பயிற்சி மிகவும் சிறப்பாகவும், உண்மையாகவும் தரப்பட்டுள்ளது. அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களும் நன்றிகளும்.

வள்ளற்பெருமானின் புதிய மற்றும் பொது நெறியான சுத்த சன்மார்க்கத்தை சிறியவர் முதல் பெரியவர் வரையிலும் நன்கு அறிவதற்கு ஏற்ற வகையில் இந்நூல் சிறப்பாக அமைந்துள்ளது.

சுத்த சன்மார்க்கம் விரைந்து பரவட்டும்.

இறையருள் அனைவருக்கும் கிட்டட்டும்.

## பொருளடக்கம்

பக்க எண்

### சுத்த சன்மார்க்க பாடம்

1. வரலாற்றுக் குறிப்பு 4
2. ஜீவகாருண்யம 5
3. ஒழுக்கம் 6
4. சத்திய தரும சாலை 7
5. முந்தைய சமயப்பற்றும் முடிபான மார்க்கமும் 8
6. தனி மார்க்கம், சங்கம், சபை மற்றும் கொடி 10
7. சுத்த சன்மார்க்கத்தின் மரபுகள், சாதனம் மற்றும் தடைகள் 11
8. சுத்த சன்மார்க்கத்தில் வெளிப்படும் கடவுள் 13
9. சாகா கல்வியால் கிடைக்கும் பயன் 14

### சுத்த சன்மார்க்க பயிற்சி வகுப்புகள்

பயிற்சி வகுப்பு நாள் 1. : நல்ல விசாரணை 17
பயிற்சி வகுப்பு - நாள் 2 : நல்ல விசாரணை 19
பயிற்சி வகுப்பு நாள் 3 : நல்ல விசாரணை 23
பயிற்சி வகுப்பு நாள் 4 : நல்ல விசாரணை 27

28 பாசுரப் பாடல்கள் 33
சுத்த சன்மார்க்க ஒழுக்கம் 40

## பொருளடக்கம்

பக்க எண்

### சுத்த சன்மார்க்க பாடம்


1. வரலாற்றுக் குறிப்பு 4
2. ஜீவகாருண்யம 5
3. ஒழுக்கம் 6
4. சத்திய தரும சாலை 7
5. முந்தைய சமயப்பற்றும் முடிபான மார்க்கமும் 8
6. தனி மார்க்கம், சங்கம், சபை மற்றும் கொடி 10
7. சுத்த சன்மார்க்கத்தின் மரபுகள், சாதனம் மற்றும் தடைகள் 11
8. சுத்த சன்மார்க்கத்தில் வெளிப்படும் கடவுள் 13
9. சாகா கல்வியால் கிடைக்கும் பயன் 14


### சுத்த சன்மார்க்க பயிற்சி வகுப்புகள்


பயிற்சி வகுப்பு நாள் 1. : நல்ல விசாரணை 17

பயிற்சி வகுப்பு - நாள் 2 : நல்ல விசாரணை 19

பயிற்சி வகுப்பு நாள் 3 : நல்ல விசாரணை 23

பயிற்சி வகுப்பு நாள் 4 : நல்ல விசாரணை 27

28 பாசுரப் பாடல்கள் 33

சுத்த சன்மார்க்க ஒழுக்கம் 40


## முன்னுரை




**இராமலெட்சுமி இளங்கோ**
M.A., (Sociology)
நிறுவநர் : கருணைசபை-சாலை
பதிப்பாசிரியர் : கருணை இதழ்
உத்தங்குடி, மதுரை - 107


திருவருட்பிரகாச வள்ளலார் வழியை எனக்கு தெரியப்படுத்தி அதில் அகஅனுபவம் பெறுவதற்கு உற்ற துணையாக இருந்துவரும் எனது கணவர் மற்றும் மார்க்கப்பணியில் துணை நிற்கும் சுற்றத்தார் மற்றும் நண்பர்களுக்கு எனது பணிவான வணக்கங்கள்.

வள்ளலார் தனது சத்திய அறிவால் இடைவிடாது கருணை நன்முயற்சியால் உண்மை கடவுளின் நிலைக் கண்டு அக்கடவுளின் திருவருள் பெற்றார்கள். தனக்கு கிடைத்த பேரின்ப பெருவாழ்வு போல் இவ்வுலகத்தார் அனைவரும் பெற்று வாழ்தல் வேண்டும் என்ற ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமையால் தான் கண்ட வழியை (சுத்த சன்மார்க்கத்தை) உலகிற்கு வெளிப்படுத்தினார்கள்.பூர்வத்தில் நின்ற சமயமத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம் என்றும் அதே நேரத்தில் எல்லா சமய மத மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாய் இம்மார்க்கம் விளங்குகிறது என்கிறார் வள்ளலார். மேலும் தான் கண்ட கடவுள் தனிக்கடவுள் என்கிறார்கள். இவ்வாறு அறிவித்த பின்பும் வள்ளலாரை அவரால் லட்சியம் வையாது விட்டு விடப்பட்ட முந்தைய சமயத்திலேயே வெளிப்படுத்துவது அஞ்ஞான மற்றும் அநாகரிகச் செயல் ஆகும்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பின்பு, உலக மனிதர் அனைவருக்கும், உண்மைப் பொது நெறியாக,ஒரு புதிய மற்றும் தனி மார்க்கமாக சுத்த சன்மார்க்கத்தை கண்டு வள்ளலார் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை இந்த சிறிய நூல் மக்களிடையே கொண்டு செல்லும் என்பதில் நம்பிக்கையுடையவளாக உள்ளேன். ஆதரவு தந்த உள்ளங்களுக்கு நன்றிகள். அணிந்துரை நல்கிய தொழிலதிபர் மற்றும் சமூக ஆர்வலர் அய்யா திரு அ.கதிரேசன் அவர்களுக்கு நன்றி.

தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்.!வந்தனம்!.

அன்புடன் மற்றும் பணிவுடன் :
ஏபிஜெ.அருள்.

# வள்ளலாரின் சுத்த சன்மார்க்க கொள்கையை தெரிந்துக் கொள்வோம்

## 1. வரலாற்றுக் குறிப்பு

கடலூர் மாவட்டம் மருதூர் என்ற ஊரில் 1823ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ம் நாள் வள்ளலார் பிறந்தார்கள். இவரின் பெற்றோர் பெயர் திருமிகு இராமையா-சின்னம்மை ஆவார்கள். வள்ளலாரின் இயற்பெயர் இராமலிங்கம். பெற்றோர் குடும்பம் சைவ சமயத்தை சார்ந்திருந்ததினால் வள்ளலார் அச்சமயத்தில் லட்சியம் வைத்து வளர்ந்து வந்தார்கள். சைவ சமய தெய்வங்களை நோக்கி பல ஸ்தோத்திரப் பாடல்களை பாடியுள்ளார்.

மேலும், நூலாசிரியர், உரையாசிரியர், ஞானாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிகை ஆசிரியர் இவ்வாறு பல்வகை ஆசிரியராய் வள்ளலார் விளங்கியதோடன்றி வியாக்கியான கர்த்தராய், சித்தமருத்துவராய், சீர்த்திருத்த வாதியாய், அருட்கவிஞராய், இவை அனைத்துக்கும் மேலாக சுத்த ஞானியாய், பன்முக ஞானம் பெற்றுத் திகழ்ந்தார்கள்.

பின்னர், சமயத்தில் தான் வைத்திருந்த லட்சியத்தை கைவிட்டு விட்டு, "ஓர் உண்மை பொது நெறியை (சுத்த சன்மார்க்கம்)" கண்டு உலகிற்கு வெளிப்படுத்தினார்கள்.

1874ம் ஆண்டு ஜனவரி 30 இரவு 12 மணிக்கு மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில், தனது மார்க்கத்தின் கல்வியாகிய சாகா கல்வியால் பெற்ற பெரும் பயனாகிய ஒளி தேகத்தில் வள்ளலார் வெளிப்பட்டார்கள்.

**கேள்வி:**

1. வள்ளலார் பிறந்த வருடம், தேதி என்ன?
2. வள்ளலாரின் பன்முக ஞானம் என்ன?
3. வள்ளலாரின் பெற்றோர் பெயர் என்ன?
4. வள்ளலார் கண்டு வெளிப்படுத்திய மார்க்கத்தின் பெயர் என்ன?
5. சுத்த சன்மார்க்கத்தின் கல்வி எது?



## 2. ஜீவகாருண்யம்

கடவுளின் அருளை ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் மட்டுமே பெறக்கூடும் என்றறிய வேண்டும் என்கிறார் வள்ளலார். இங்கு கடவுள் அருள் என்பது கடவுள் தயவு. ஜீவகாருண்யமென்பது ஆன்மா தயவு. தயவை தயவால் தான் பெற வேண்டும் என்கிறார் வள்ளலார்.

பசி,கொலை, பிணி, ஆபத்து, தாகம், பயம், இன்மை, இச்சை, இவைகளால் மற்ற ஜீவர்கள் துக்கத்தை அனுபவிக்க கண்ட போதும், கேட்ட போதும்,அறிந்த போதும், நம்மிடம் ஆன்ம உருக்கம் உண்டாகும் என்றறிய வேண்டும். இந்நிலையில் துக்கப்படும் அவ்வுயிர்களுக்கு நம்மால் முடியுமளவு துக்கத்தை போக்க முயலுதல் வேண்டும் என்கிறார் வள்ளலார்.

இங்ஙனம் நம்மிடம் ஏற்படுகின்ற தயவு மூலம் கடவுளின் தயவை (அருளை) பெறுதல் வேண்டும். ஜீவகாருணியம் உண்டாவதற்கு ஏது அல்லது துவாரம் யாதெனில் கடவுளுடைய பெருமையையும் தரத்தையும் நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தலே. அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே ஜீவகாருணீயம். ஜீவகாருண்யமே இறைவீட்டின் திறவுக்கோல்.

திருஅருட்பிரகாச வள்ளலாரிடம் ஏற்பட்ட ஆன்ம தயவு :

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்உயிர்போல் எண்ணி உள்ளே
    ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
    யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்எனநான் தெரிந்தேன் அந்த
    வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
    சிந்தைமிக விழைந்த தாலோ.

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என் நேர்உறக் கண்டுளந் துடித்தேன்

**சுத்த சன்மார்க்கம்**

**கேள்வி :**

1. கடவுளின் அருளை எதனால் பெறக்கூடும் என்கிறார் வள்ளலார்?
2. ஜீவர்கள் எவை எவையால் துக்கம் அடைகிறார்கள்?
3. கடவுள் அருள் என்பது யாது?
4. இறை வீட்டின் திறவுக்கோல் எது?
5. ஜீவகாருண்யம் என்றால் என்ன?

## 3. ஒழுக்கம்

வள்ளலார் ஒழுக்கங்களை நான்கு தலைப்புகளில் விரிவாக தருகிறார்கள். அவையாவன 1) இந்திரிய ஒழுக்கம் 2) கரண ஒழுக்கம் 3) ஜீவ ஒழுக்கம் 4) ஆன்ம ஒழுக்கம். முக்கிய சிலவற்றை காண்போம்.

❖ பொய் சொல்லாதிருத்தல் வேண்டும்.
❖ குரூரமாகப் பாராதிருத்தல். சுவை விரும்பாதிருத்தல்.
❖ கொடிய சொல் செவி புகாது நல்ல சொல்களை கேட்டல்
❖ உயிர்களுக்கு இம்சை நேரிடும் காலத்தில் எவ்விதத் தந்திரத்தினாலாவது தடை செய்தல்.
❖ எப்பொழுதும் ஆடை அணிவித்திருக்க வேண்டும்.
❖ காலில் செருப்பு இல்லாமல் வெளியே செல்லக் கூடாது.
❖ பசித்த போது உணவு கொள்ளல் வேண்டும்.
❖ மலம், ஜலம் கழிக்கும் போது வேறு சிந்தனையில்லாமல் இருக்க வேண்டும். மேலும்,
❖ நமது மனம் ஆண்டவர் நிலை குறித்து எண்ணிக் கொண்டே இருக்க வேண்டும்
❖ நமது சிறுமையையும் தரத்தையும் ஆண்டவரின் பெருமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தல் வேண்டும். மேலும்,
❖ எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் பாவிக்கும் உணர்வை வருவித்தல்
❖ பேதங்களை உருவாக்கும் சாதி,சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திரம், தேசம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்பவற்றில் லட்சியம் வைக்கக் கூடாது.





சுத்தசன்மார்க்க ஒழுக்கம்

இங்கு இருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள் எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள் என்ற திருவார்த்தை அதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாக உடையது கடமை."

**கேள்வி:** 1.ஒழுக்கங்களின் வகைகள் எத்தனை?

2. மனிதர்களிடத்தில் பேதங்களை உருவாக்குபவை எவை?
3. எதை ஊன்றி விசாரித்தல் வேண்டும்?
4. சுத்தசன்மார்க்க ஒழுக்கம் என்பது என்ன?

## 4. சத்திய தரும சாலை

ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் பசி நீக்கலும் கொலை நீக்கலும் விசேசமாக உள்ளது.

ஜீவர்களின் பசி நீக்க வடலூரில் 23-05-1867 இல் வள்ளலார் ஒரு தரும சாலையை நிறுவினார்கள். 1870 வரை வள்ளலார் இச்சாலையிலேயே தங்கி ஜீவகாருண்ய பசி நீக்கும் பணியை நேரிடையாக இருந்து கவனித்தார்கள். இச்சாலைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச் சாலை என்று பெயரிடுகிறார்கள். கடந்த 149 வருடங்களாகவும் இன்றும் தொடர்ந்து அங்கு பசி நீக்கும் ஜீவகாருண்ய ஒழுக்கம் நடைப்பெற்று வருகிறது. அன்று வள்ளலாரால் தொடங்கி வைக்கப்பட்ட அடுப்பு இன்றும் தொடர்ந்து எரிந்து கொண்டே உள்ளது. இதை அணையா அடுப்பு என்றழைக்கிறார்கள்.

"நாமனைவரும் எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்டபோது மிகவும் கருணை உள்ளவர்களாகி நம்மால் கூடியமட்டில் அந்தப் பசி என்கின்ற ஆபத்தைப் பொதுவாக நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே ஆன்ம லாபம் என்று அவசியம் அறிய வேண்டும்" என்கிறார் வள்ளலார்.

**கேள்வி**

1. வள்ளலார் நிறுவிய சாலையின் பெயர் என்ன?
2. ஒழுக்கங்களில் விசேச ஒழுக்கம் எது?
3. ஆன்ம லாபம் எது என வள்ளலார் சொல்கிறார்கள்?
4. அணையா அடுப்பு எங்கு உள்ளது? யாரால் ஏற்றி வைக்கப்பட்டது?

## 5. முந்தைய சமயப்பற்றும் முடிபான மார்க்கமும்

திருஅருட்பிரகாச வள்ளலார் தான் பிறந்த குடும்பத்தின் சமயமான சைவ சமயத்தை தழுவி வளர்ந்து வந்தார்கள். அச்சமயத்தின் தத்துவங்களை முழுமையாக கற்று, அச்சமயம் சார்ந்த பல ஸ்தோத்திரப் பாடல்களை பாடியுள்ளார்கள். மேலும், கருணை,ஒழுக்கம்,இயற்கை குறித்தும் பலப் பாடல்களை இயற்றியுள்ளார்கள்.

புராண சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவராய் திகழ்ந்தார்கள். பல சமய ஸ்தலங்களுக்கும் சென்று, அங்குள்ள தெயவங்கள் குறித்து அருட்பா இயற்றியுள்ளார்கள். தன்னை தேடிவருபவர்களுக்கு திருநீறு கொடுத்து பல இன்னல்களை நீக்கினார்கள். அச்செய்தி பரவி, அவரை தினமும் தேடி பலர் வரலாயினர்.

நிற்க!

சைவ சமயத்தில் லட்சியம் வைத்திருந்த போதிலும் வள்ளலார் கடவுளின் உண்மை குறித்து தொடர்ந்து விசாரணையிலேயே இருந்தார்கள். தொடர்ந்து இடைவிடாது செய்த நல்ல விசாரணையால், சமயத்தில் தான் வைத்திருந்த பற்றினை முழுமையாக கைவிட்டு விடுகிறார்கள். கருணை ஒன்றையே சாதனமாகக் கொண்டு செய்த நல்ல விசாரணையில் ஓர் உண்மைப் பொது மார்க்கத்தை கண்டார்கள்.

அம்மார்க்கத்திற்கு "சுத்த சன்மார்க்கம்" என்று பெயரிட்டு அழைக்கிறார் வள்ளலார்.

22-10-1871 அன்று மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்தில் தான் கண்ட சுத்த சன்மார்க்கத்திற்கென ஒரு கொடியை அறிமுகப்படுத்தி அக்கொடியை ஏற்றி ஒரு மகாபேருபதேசத்தை ஆற்றுகிறார்கள். மேற்படி உரையில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்கள

"நாம் நாமும் முன் பார்த்தும் கேட்டும் லட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லட்சியம் வைக்க வேண்டாம். ஏனென்றால், அவைகளில் ஒன்றிலாவது குழூஉக்குறியன்றித் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும், கொஞ்சமேனும் புறங் கவியச் சொல்லாமல், மண்ணைப்போட்டு மறைத்து விட்டார்கள்........ இதுபோல், சைவம் வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லட்சியம் வைக்க வேண்டாம்."



"........ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும், இவைகளுக்கெல்லாம் சாட்சி நானேயிருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லட்சியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. ..... அந்த லட்சியம் இப்போது எப்படிப் போய்விட்டது. பார்த்தீர்களா! அப்படி லட்சியம் வைத்ததற்குச் சாட்சி வேறே வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற - திருவருட்பாவில் அடங்கியிருக்கிற - ஸ்தோத்திரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவர்களுடைய ஸ்தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டு வந்தால், அவைகளே சாட்சி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது."

''.........இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமேலேற்றியிருக்கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டு விட்டதினால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டு விட்டீர்களானால், என்னைப்போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள்..........நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லட்சியமே என்னை இந்த நிலையில் தூக்கி விட்டதென்றாலோ, அந்த லட்சியம் தூக்கிவிடவில்லை. என்னை இந்த இடத்துக்குத் தூக்கிவிட்டது யாதெனில்: ...... கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக" என்றது தான். என்னை யேறாநிலை மிசை யேற்றி விட்டது யாதெனில் தயவு. தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கி விட்டது.

"........இரண்டரை வருசமாக நான் சொல்லிக் கொண்டு வந்தேன். இனிச்சொல்பவர்கள் சில நாள் தடைப்பட்டிருப்பார்கள்."

"......உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை. கொடி கட்டிக் கொண்டபடியால், இனி எல்லோரும் உண்மையை அறிந்து கொள்வார்கள். முன் உள்ளவர்கள் உண்மையைத் தெரியவொட்டாது மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். இத்தருணம் ஆண்டவரும் தெரிவித்தார், தெரிவிக்கின்றார், தெரிவிப்பார்.

நீங்கள் எல்லவரும் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்......"

**கேள்வி:**

1. வள்ளலார் ஆரம்பத்தில் பற்று வைத்திருந்த சமயத்தின் பெயர் என்ன?
2. எவையின் மீது லட்சியம் வைக்காதீர்கள் என்கிறார் வள்ளலார்?
3. எத்தனை வருடமாக (உண்மை கடவுள் குறித்து) சொல்லி வருவதாக குறிப்பிடுகிறார் வள்ளலார்?
4. தன்னை ஏறா நிலை மேல் ஏற்றிவிட்டது எதுவென குறிப்பிட்டு சொல்கிறார்?
5. வள்ளலார் மகாபேருபதேசம் எப்பொழுது எங்கு ஆற்றினார்கள்?

## 6. தனி மார்க்கம், சங்கம், சபை மற்றும் கொடி

திருஅருட்பிரகாச வள்ளலார் தான் வைத்திருந்த சமயப்பற்றை கைவிட்டுவிட்டு ஒரு புதிய தனி மார்க்கம் காண்கிறார்கள். அம்மார்க்கத்திற்கு சுத்த சன்மார்க்கம் என்றுப் பெயரிட்டு அழைக்கிறார்கள். சுத்த சன்மார்க்கம் என்பதில் சுத்தம் என்பது ஒன்றுமல்லாது. சுத்தம் என்பது சன்மார்க்கமென்னும் சொல்லுக்குப் பூர்வம்(முன்பாக) வந்ததால், பூர்வத்தில் நின்ற சமயமத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம் என்கிறார் வள்ளலார். தனது மார்க்கத்திற்கென தனி சபை, சங்கம்,கொடி தந்துள்ளார்கள். தன் மார்க்கத்திற்கென ஒரு சபையை 1871ம் ஆண்டில் கட்டத்தொடங்கினார். 25-01-1872 அன்று பூச நாளில் முதல் வழிபாடு அச்சபையில் தொடங்கப்பட்டது. மேற்படி சபையை சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை என்று திருப்பெயரிடுகிறார்.

வள்ளலார் தான் தொடங்கிய சங்கத்தையும் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கமென்றும் திருபெயர் வழங்குதல் வேண்டும் என 18-07-1872 அன்று வெளியிட்ட சபை வழிபாட்டு விதி அறிவிப்பில் அறிவிக்கிறார். சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கை விட்டவர்களும், காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக்கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள் என்கிறார் வள்ளலார்.

சமய ஞானிகள் எவரும் தம் கொள்கைக்குத் தனிக்கொடி கண்டதில்லை. வள்ளலார் ஒருவரே தமது மார்க்கத்திற்குத் தனிக்கொடி



கண்டார்கள். மஞ்சள், வெள்ளை ஆகிய இரு நிறங்கொண்ட கொடியை 22-10-1873 காலை 8 மணிக்கு முதன் முதலாக சித்திவளாகத்தில் கொடி கட்டிக் காட்டி, நீண்ட உபதேசம் ஒன்றையும் அருளினார்கள்.

**கேள்விகள்:**

1. வள்ளலார் கண்ட மார்க்கத்தின் பெயர் என்ன?
2. சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் யார்?
3. சுத்த சன்மார்க்கக் கொடியின் நிறம் என்ன?
4. வள்ளலார் சங்கத்தின் பெயர் என்ன?
5. சுத்த சன்மார்க்கம் என்றால் என்ன என வள்ளலார் குறிப்பிடுகிறார்?

## 7. சுத்த சன்மார்க்கத்தின் மரபுகள், சாதனம் மற்றும் தடைகள்

சுத்த சன்மார்க்கத்தின் மரபுகளை ஆண்டவரே அறிவித்தார் என கீழ்வரும் பாடல் மூலம் தெரிவிக்கிறார் வள்ளலார்.

சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம்
தான்என அறிந்தஅறிவே
தகும்அறிவு மலம்ஐந்தும் வென்றவல் லபமே
தனித்தபூ ரணவல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்ததொழிலே
மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே
வியந்தடைந் துலகம்எல்லாம்
மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேஇன்பமாம்
மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென் றுரைத்தகுருவே
தேகாதி மூன்றும்நான் தருமுன்அருள் செய்தெனைத்
தேற்றிஅருள் செய்தசிவமே
சிற்சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே
தெய்வநட ராஜபதியே.

மேலும் ஆண்டவர் கீழ்வருமாறு தெரிவித்ததாக உபதேசிக்கிறார் வள்ளலார்

சமயத் தேவர்களை வழிபாடு செய்வது அவசியமல்ல. மேற்குறித்தவர்கள் அற்ப சித்தியைப் பெற்று, அதில் மகிழ்ந்து அகங்கரித்து, மேல் படிகள் ஏறவேண்டியவைகளை ஏறிப் பூரண சித்தியை யடையாமல் தடைப்பட்டு நிற்றல்போல், இங்கு மற்றவைகளை உன்னி அவலமடைந்து நில்லாமல், சர்வ சித்தியுடைய கடவுள் ஒருவருண்டென்று அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து, பூரண சித்தியைப் பெற வேண்டுவது சன்மார்க்கக் கொள்கை. மேலும் தனித்தலைவன் லட்சியந் தவிர அநித்திய சடதுக்காதிகளைப் பொருட்படுத்தி உபாசனாதி மார்க்கமாய் வழிபடுவது கொள்கை யல்ல.

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய சாதனம் எதுவெனில் எல்லா ஜீவர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்து அன்புமே என்கிறார். தத்துவவொழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தொழிலொழுக்கம்பற்றி ஜாதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு ஜாதியேற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள். அவையாவன: ஜாதியாசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்தாசாரம், சாஸ்திராசாரம் முதலிய ஆசாரங்கள். ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்தசிவசன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கி பொது நோக்கம் வந்தால், மேற்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடுமேயல்லது, இல்லாவிடில் கூடாது.

தனது மார்க்கத்துக்கு எக்காலத்தும் முக்கியத் தடைகளாக சமயம், மதம் முதலிய மார்க்கங்களை தடைகளாக அறிவிக்கிறார் வள்ளலார். மேலும், அவையின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் மற்றும் வருணம், ஆசிரமம் முதலிய உலக ஆசாரங்களும் எங்கள் மனதில் பற்றாதவண்ணம் அருள் செயதல் வேண்டும் என ஆண்டவரிடதில் விண்ணப்பம் செய்து வேண்டுகிறார்.



**கேள்வி:**

1. சுத்த சன்மார்க்கத்தின் நான்கு மரபுகள் எவை?
2. சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய சாதனம் எது?
3. தயவின் விருத்திக்கு தடையாக இருப்பவை எவை?
4. சுத்த சன்மார்க்கத்திற்கு எதை எக்காலத்தும் முக்கிய தடைகளாக அறிவிக்கிறார்?
5. எவையெல்லாம் நம் மனத்தில் பற்றக்கூடாது என ஆண்டவரிடத்தில் விண்ணப்பம் செய்கிறார்?

## 8. சுத்த சன்மார்க்கத்தில் வெளிப்படும் கடவுள்

திருஅருட்பிரகாச வள்ளலார் தனது தனி வழியில் இடைவிடாது செய்த நல்ல விசாரணையில் ஓர் உண்மை கடவுளை தான் கண்டதாக தெரிவிக்கிறார். தனது மடலில் 12-04-1871ல் கீழ்வருமாறு தெளிவாக குறிப்பிட்டு சொல்கிறார்கள்.

“.. இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படிச் சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத் தேவர்களும், எல்லாக் கடவுளரும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி.

இது உண்மையாயின் அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னையடுத்த தாங்களும் பெறுவதற்கு யாதொரு தடையுமில்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள், அஞ்சவேண்டாம்.

மேலும், வள்ளலார் தெரிவிக்கிறார்கள்

எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும், மற்றையெல்லாவற்றையும் தோற்றுவித்தும், விளக்கஞ் செய்வித்தும், துரிசு நீக்குவித்தும், பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும் எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக்கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மையன்பாற்

கருத்திற் கருதி வழிபாடு செய்யின் அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்குமென்றும், அத்திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைக ளெல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவுந் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை யடைதல் கூடுமென்றும், எங்கள் அறிவில் தேவரீர் திருவருளால் உண்மைப்பட வுணர்த்தியருளப் பெற்றோம்.

தான் கண்ட உண்மை கடவுளை ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமையால் உலகிற்கு உள்ளது உள்ளபடியாக தெரிவிக்கிறார் வள்ளலார்.

சுத்த சிவநிலை அறிவது எப்படியெனில்:

"ஒழுக்கம் நிரம்பிக் கருணையே வடிவாக நிற்கும் விசார சங்கல்ப முண்டானால், நாம் தாழுங் குணம் வரும். அத்தருணத்தில் திருவருட்சத்தி பதிந்து அறிவு விளங்கும். ஆதலால், இடைவிடாது கருணை நன்முயற்சியில் பழகல் வேண்டும்." என்கிறார் வள்ளலார்.

## கேள்விகள்

1. வள்ளலார் கண்ட கடவுள் சமய,மத மார்க்கங்களில் சொல்லப்பட்டுள்ள கடவுளா?
2. கடவுளின் நிலையறிவதற்கு முதலில் எதை நிரப்பிக் கொள்ள வேண்டும்?
3. கடவுளை எங்ஙனம் வழிபாடு செய்ய சொல்கிறார்கள்?
4. வள்ளலாரிடமிருந்த உரிமை யாது?
5. கடவுளின் அருளால் கிடைக்கும் வாழ்வு எது?

## 9. சாகா கல்வியால் கிடைக்கும் பயன்

என் மார்க்கம் இறப்பை ஒழிக்கும் மார்க்கம். என் மார்க்கத்தில் சாகா கல்வியை தவிர வேறு ஒன்றுமில்லை என்கிறார் வள்ளலார். சாகா கல்வியால் தனி வடிவம் பெறலாம். தனி வடிவம், ஒளி தேகம் என்றால் என்ன என்பதை கீழ்வரும் பாடல் மூலம் அறியலாம்.

தூக்கமும் துயரும் அச்சமும் இடரும்
தொலைந்தன தொலைந்தன எனைவிட்
டேக்கமும் வினையும் மாயையும் இருளும்



இரிந்தன ஒழிந்தன முழுதும்
ஆக்கமும் அருளும் அறிவும்மெய் அன்பும்
அழிவுறா உடம்பும்மெய் இன்ப
ஊக்கமும் எனையே உற்றன உலகீர்
உண்மைஇவ் வாசகம் உணர்மின்

துன்மார்க்க நடையிடைத் தூங்குகின் றீரே
தூக்கத்தை விடுகின்ற துணைஒன்றும் கருதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திட விழையீர்
சாவையும் பிறப்பையும் தவிர்ந்திட விரும்பீர்
பன்மார்க்கம் செல்கின்ற படிற்றுளம் அடக்கீர்
பசித்தவர் தம்முகம் பார்த்துண வளியீர்
என்மார்க்கம் எச்சுகம் யாதுநும் வாழ்க்கை
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.

ஆராலும் அறிந்துகொளற் கரியபெரும் பொருளே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
காராலும் கனலாலும் காற்றாலும் ககனக்
கலையாலும் கதிராலும் கடலாலும் கடல்சூழ்
பாராலும் படையாலும் பிறவாலும் தடுக்கப்
படுதலிலாத் தனிவடிவம் எனக்களித்த பதியே
சீராலும் குணத்தாலும் சிறந்தவர்சேர் ஞான
சித்திபுரத் தமுதேஎன் நித்திரைதீர்ந் ததுவே.

காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே.

மேலும், சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல், இவை மூன்றும் சாகாத கல்வியைத் தெரிவிக்கும். சுத்த சன்மார்க்கத்திற்கு உபாய வகைகளான அபரமார்க்கக் காட்சி கூடாது. பரமார்க்கமாகிய

அக அனுபவமே உண்மை. மேற்படி மூன்றையும் இலட்சியமாகவே கொள்க. உபாய வகையை நம்புதல் கூடாது உண்மையை நம்புதல் வேண்டும். இ∴து ரகசியம்.

இந்த சாகா கல்வி மனிதப்பிறவிக்கு மட்டுமே கைக்கூடுவதாக உள்ளது. மேலும் வள்ளலார் கீழ்வருமாறு கூறுகிறார்கள்

“நாங்கள் அப்பிறவிகள் (தாவர, ஊர்வன- நீர்வாழ்வன, பறவை, விலங்கு, தேவ, நரக முதலிய யோனி வர்க்கங்கள்) தோறும் அடைந்த அலுப்பும் அச்சமும் அவலமும் களைப்பும் துன்பமும் திருவுளத்தடைத்து இரங்கியருளி அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயரறிவுடைய இம்மனித தேகத்தில் செலுத்தியருளிய தேவரீரது பெருங்கருணைக்கு யாங்கள் செய்யுங் கைம்மாறு ஒன்றுந் தெரிந்தோமில்லை.”

வள்ளலார் தனி வடிவத்தை தான் பெற்றதாக கீழ்வரும் பாடலில் தெளிவாக குறிப்பிடுகிறார்கள்:

சுத்த வடிவும் சுகவடிவாம் ஓங்கார
நித்த வடிவும் நிறைந்தோங்கு - சித்தெனும்ஓர்
ஞான வடிவுமிங்கே நான்பெற்றேன் எங்கெங்கும்
தானவிளை யாட்டியற்றத் தான்.

## கேள்வி:

1. சுத்த சன்மார்க்கத்தில் வள்ளலார் வெளிபடுத்தும் கல்வியின் பெயர் என்ன?
2. சாகாகல்வியால் பெறப்படும் வடிவம் எப்படிப் பட்டது?
3. பிறவிகளின் வர்க்கங்கள் எத்தனையாக சொல்லப்படுகிறது?
4. சாகா கல்வியை தெரிவிக்கும் மூன்று எவை?
5. அழியா பெருவாழ்வை எத்தேகம் பெறுகிறது?



## சுத்த சன்மார்க்க பயிற்சி வகுப்புகள்
## பயிற்சி வகுப்பு நாள் 1. : நல்ல விசாரணை

அன்பர்களே!

திருஅருட்பிரகாச வள்ளலாரே நமக்கு துணை.

அவர்தம் நெறியிலேயே நம் பயிற்சி.வகுப்பில் சேர்ந்திருப்பவர்கள் அனைவருமே கீழ்க்காணும் தகுதியை ஏற்கனவே பெற்றவர்களாக கருதப்படுகிறீர்கள்.

அதாவது

- 15 வயதுக்கு மேற்பட்டவர்கள்.
- நல்லறிவு கடவுள் பக்தி உடையவர்கள்
- உயிரிரக்கம் பொது நோக்கம் கொண்டவர்கள்
- திரிகரண அடக்கம் பெற்றவர்கள் முதலிய நற்குண ஒழுக்கங்கள்

மேலும்

- உண்மையுரைத்தல்
- இன்சொல்லாடல்
- உயிர்க்குபகரித்தல் — முதலிய நற்செய்கை ஒழுக்கங்கள் பெற்றவர்கள்.

அன்பர்களே,

மேலே சொன்ன ஒழுக்கங்களை பெற்று உள்ள நாம் நன்முயற்சி பயிற்சி வகுப்புக்கு உரியவர்களாகி விட்டோம். (மேற்படிச் சொல்லப்பட்ட தகுதிகள் வள்ளலாராலேயே வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.)

அடுத்து, விண்ணப்பம்:

சுத்த சன்மார்க்கத் திருமந்திரம் சொல்வோம்:

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி.

(தரையில் விரிப்பு விரித்து சம்மணம் அல்லது நாற்காலியில் அமர்ந்து நிமிர்ந்து உட்கார வேண்டும்.

நம் கைகளை நம் வள்ளலார் அய்யா வைத்திருப்பது போல் வைக்கவும்.)

இதோ விண்ணப்பம் செய்வோம்:

"நாங்கள் பிறவிகள் தோறும் அடைந்த அலுப்பும் அச்சமும் அவலமும் களைப்பும் துன்பமும் திருவுளத்தடைத்து, இரங்கியருளி,அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயரறிவுடைய இம்மனித தேகத்தில் செலுத்தியருளிய தேவரீரது பெருங்கருணைக்கு யாங்கள் செய்யுங் கைம்மாறு ஒன்றுந் தெரிந்தோமில்லை.

கடவுளே! யாங்கள் விண்ணப்பிக்கின்ற அற்ப வாசகத்தில் உரிமை நோக்காது அங்கீகரித்தருளி எங்களைக் காத்தருளல் வேண்டும்."

உலகத்தில் இருக்கின்ற எல்லா ஜனங்களுக்காக ஆண்டவராகிய உங்களிடத்தில் விண்ணப்பித்து, தேவரீர் திருவருளைப் பெற்ற திருஅருட்பிரகாச வள்ளலார் அவர்கள் கண்ட உண்மை பொது நெறியிலேயே உங்களின் திரு நிலைக் காண இன்று விசாரம் செய்கிறோம். எங்களை அங்கீகரித்து அருள வேண்டும்.

அன்பர்களே!

கீழ்க்காணும் திருவாசகத்தை நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இதோ, சொல்லுங்கள்

"எல்லா அண்டங்களையும்,
எல்லா உலகங்களையும்,
எல்லாஉயிர்களையும்,
எல்லாப் பொருள்களையும்,
மற்றையெல்லாவற்றையும்
தோற்றுவித்தும், விளக்கம் செய்வித்தும்,
துரிசு நீக்குவித்தும், பக்குவம் வருவித்தும்,
பலன் தருவித்தும், எங்கும் பூரணராகி விளங்குகின்ற
"ஓர் உண்மைக்கடவுள்" உண்டு.

அக்கடவுளை உண்மையன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்கிறேன்.



அக்கடவுள் திருவருள் என் கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்கும் என்றும், அத்திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை நான் பெறுதல் முடியுமென்றும், என் அறிவில் தேவரீர் திருவருளால் உண்மைப்பட உணர்த்தியருளப் பெற்றேன் இன்று."

அன்பர்களே!

மேற்படி திரு வாசகங்கள் அனைத்தும் நம் வள்ளலார் ஆண்டவரிடத்தில் வைத்த விண்ணப்ப வாசகங்களே என அறிக.

நாம் எப்பொழுதெல்லாம் திருவிளக்கை தெய்வபாவனை செய்கிறோமோ அப்பொழுதெல்லாம் இத் திருவாசகங்களை வாசித்து வழிபாடு செய்தல் வேண்டும்.

இன்றைய முதல் வகுப்பு முற்றிற்று.

முதல் வகுப்பு மூலம் நாம் கருத்தில்கொண்டவை:

1. கடவுள் ஒருவரே!
2. உண்மை அன்பால் கருதும் கடவுள் எங்கும் உள்ளார்
3. துதித்து, நினைந்து, உணர வேண்டும்
4. கடவுள் திருவருளால் அவத்தைகள் நீங்கும்
5. மரணம் தவிர்த்துக் கொள்ளலாம்.

முதல் வகுப்பில் சொல்லப்பட்டவையை அடுத்த வகுப்புக்குள் ஊன்றிப் படித்து கருத்தில் கொள்ள வேண்டும். (இது மிக முக்கியம்).

மீண்டும் சத்தியம் செய்து சொல்கிறேன். வகுப்பின் பாடங்கள் அனைத்தும் வள்ளலாரின் ஆவணங்கள் அடிப்படையிலேயே எடுத்துரைக்கப்படுகிறது. ---ஏபிஜெ. அருள்

## பயிற்சி வகுப்பு - நாள் 2 : நல்ல விசாரணை

தரையில் ஒரு விரிப்பில் சம்மணம் போட்டு அல்லது நாற்காலியில் அமர்ந்து நிமிர்ந்து உட்காரவோம்.

நம் கைகளை நம் அய்யா வைத்திருப்பது போல் வைப்போம்.

திருமந்திரம் சொல்வோம்:

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி.

இதோ இன்று விண்ணப்பம் செய்வோம்:

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

(சிறிது நேரம் அமைதியாக இருந்து நமக்குள் உள்ளமுழுந்துவோம்.)

உள்ளமுழுந்தியுள்ள நாம்,

சிந்தனையில், நாம் யார்? நமக்கு மேல் நம்மை அனுட்டிக்கின்ற கடவுளின் நிலை என்ன? என்று நல்ல விசாரணை செய்தல் வேண்டும்.

அன்பர்களே! இப்பகுதி மிக முக்கியம்:

எவர் ஒருவர் மனத்தில் மற்ற எந்தொரு விசாரமின்றி நாம் யார்? நமக்கு மேல் நம்மை அனுட்டிக்கின்ற கடவுளின் நிலை என்ன? என்பதில் மட்டும் உள்ளமுழுந்தி சிந்தித்து சிந்தித்தலை விசாரிக்கிறார்களோ அவர்களுக்கு

உள்ளத்தில் உண்மை பதிவது சத்தியம் சத்தியம் என்கிறார் நம் வள்ளலார்.

## நாம் யார் ?

இதோ நம் வள்ளலார் நாம் யார் என விளக்குகிறார்கள்:

இயற்கையே அஞ்ஞான விருளில், அஞ்ஞான வுருவில் அஞ்ஞானிகளாய் அஞ்ஞானத்திற் பயின்று ஏதுந் தெரியாது கிடந்த எங்களைத் தேவரீர் பெருங்கருணையாற் பவுதிக வுடம்பிற் சிறிதறிவு தோற்றி விடுத்த அஞ்ஞான்று தொட்டு இஞ்ஞான்று வரையும், அது கொண்டு அறிவே வடிவாய், அறிவே யுருவாய், அறிவே பொறியாய்,



அறிவே மனமாய், அறிவே யறிவாய், அறிவே யனுபவமாய் அனுபவிக்கத் தெரிந்து கொள்ளாது, குற்றமே வடிவாய்க், குற்றமே யுருவாய்க், குற்றமே பொறியாய்க், குற்றமே மனமாய்க், குற்றமே யறிவாய்க், குற்றமே யனுபவமாய் அனுபவிக்கின்ற சிறியேங்கள் திருச்சமுகத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பமும் குற்றமே வடிவாய்க் குற்றமே குறிக்குமென்றறிந்தோ மாயினும், குற்றங் குறியாத வகை விண்ணப்பஞ் செய்தற்கு ஒருவாற்றானு முணர்ச்சி யில்லோ மாதலிற் துணிவு கொண்டு விண்ணப்பிக்கின்றோம். குற்றங்களையே குணங்களாகக் கொள்ளுதல் தேவரீர் திருவருட் பெருமைக்கியற்கை யாதலின் இவ்விண்ணப்பங்களிற் குற்றங் குறியாது கடைக்கணித் தருளிக் கருணை செய்தல் வேண்டும்.

அஞ்ஞான விருளில் ஒன்றுந் தெரியா துணர்ச்சி யின்றிக்கிடந்த காலம்போக, அவ்விருளைவிட்டு நீங்கிய காலத்தே,

இவ்வுலகினிடத்து புல், நெல், மரம், செடி, பூடு முதலியவாகவும் கல், மலை, குன்று முதலியவாகவும் பிறந்து பிறந்து களையுண்டல், வெட்டுண்டல், அறுப்புண்டல் கிள்ளுண்டல், உலர்ப்புண்டல், உடைப்புண்டல், வெடிப்புண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத்தாவர யோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

பின்னர் எறும்பு, செல், புழு. பாம்பு, உடும்பு, பல்லி முதலியவாகவும் தவளை, சிறுமீன், முதலை, சுறா, திமிங்கலம் முதலியவாகவும் பிறந்து பிறந்து தேய்ப்புண்டல், நசுக்குண்டல், அடியுண்டல், பிடியுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அவ்வூர்வன நீர் வாழ்வன யோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

பின்னர் ஈ, வண்டு, தும்பி, குருவி, காக்கை, பருந்து. கழுகு முதலியவாகப் பிறந்து பிறந்து, அடியுண்டல், பிடியுண்டல், அலைப்புண்டல், உலைப்புண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து அப்பறவையோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

பின்னர் அணில், குரங்கு, நாய், பன்றி, பூனை, ஆடு, மாடு, யானை, குதிரை, புலி, கரடி முதலியவாகப் பிறந்து பிறந்து பிடியுண்டல், அடியுண்டல், குத்துண்டல், வெட்டுண்டல், தாக்குண்டல்,

கட்டுண்டல், தட்டுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து அவ்விலங்கு யோனிவர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

பின்னர் பைசாசர், பூதர், இராக்கதர், அசுரர். சுரர் முதலியராகப் பிறந்து பிறந்து அலைப்படுதல், அகப்படுதல், அகங்கரித்தல், அதிகரித்தல், மறந்து நிற்றல், நினைந்து நிற்றல், மயக்குறுதல், திகைப்புறுதல், போரிடுதல், கொலைப்படுதல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத்தேவயோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்

பின்னர் காட்டகத்தார், கரவு செய்வார், கொலை செய்வார் முதலியராகப் பிறந்து பயப்படல், சிறைப்படல், சிதைபடல் முதலிய அவத்தைகளால் இறந்திறந்து அந்நரகயோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

அங்ஙனம் யாங்கள் அப்பிறவிகள் தோறும் அடைந்த அலுப்பும் அச்சமும் அவலமும் களைப்பும் துன்பமும் திருவுளத்தடைத்து இரங்கியருளி அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயரறிவுடைய இம்மனித தேகத்தில் செலுத்தியருளிய தேவரீரது பெருங்கருணைக்கு யாங்கள் செய்யுங் கைம்மாறு ஒன்றுந் தெரிந்தோமில்லை.

உயிர்களின் அகத்தும் புறத்தும் அகப்புறத்தும் புறப்புறத்தும் நீக்கமின்றி நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!

நான் யார் என்று இன்று தெரிந்து கொண்டேன்.

நான் யார் என்று இன்று தெரிந்து கொண்டதால்

எல்லா உயிர்களும் என் உயிர் போல்

என இன்று அறிந்து தயவுசெய்கின்றேன்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

அன்பர்களே! திரு மந்திரம் சொல்வோம்:

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி.

வகுப்பு 1 மற்றும் 2ல் உள்ள குறிப்புகளை பல முறை ஊன்றி படிக்க வேண்டும். ஏதேனும் சந்தேகமிருந்தால் நம் வகுப்பில்



சேர்ந்துள்ள அன்பர்களிடம் அது குறித்து சொல்லி நல்ல விசாரணை செய்யுங்கள்.

வகுப்பு 2 முற்றும்.

வகுப்பு 1 மற்றும் 2 ல் உள்ள விண்ணப்பங்களை தினமும் வாசித்து கருத்தில் ஏற்றியே ஆக வேண்டும்.

இது சத்தியம்.

வகுப்பு தொடரும்......

அன்புடன் .ஏபிஜெ அருள். மதுரை.

## பயிற்சி வகுப்பு நாள் 3 : நல்ல விசாரணை

எல்லோருக்கும் வணக்கம்.

அன்பர்களே!!. இன்றைய விண்ணப்பம் வாசிப்போம். (வள்ளலார் கைப்பட எழுதியது)

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

மேலும் ஒரு சத்திய வாக்கியத்தை வாசிப்போம்:

"எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாக விளங்குகிறது சுத்த சன்மார்க்கம்."

(உலகில் காணும் சமய,மத,மார்க்கங்களை எக்காலத்தும் முக்கிய தடையாக அறிவிக்கிறது சுத்த சன்மார்க்கம். அதே நேரத்தில் எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி விளங்குகிறதும் சுத்த சன்மார்க்கமே- இந்த சிறப்பின் உண்மையை தான் நாம் வகுப்புகளில் தெரிந்துக் கொள்ளப் போகிறோம்)

முதல் வகுப்பில் கடவுள் யார் என்று கருத்தில் கருத வேண்டும் என்பதைக் குறித்தும்,

இரண்டாம் வகுப்பில் நாம் யார் என்று ஓரளவு தெரிந்துக் கொண்டோம்.

மேற்படி இரண்டு வகுப்பில் தெரிந்து கொண்டதை தலைப்பாக காண்போம்.

- ❖ கடவுள் ஒருவரே!
- ❖ பல பிறவிகளில் நாம் பிறந்து பிறந்து இறந்து இறந்து பின் உயர்வுடையதாகிய இந்த மனித தேகத்தில் வந்துள்ளோம்.
- ❖ ஒவ்வொருவரும் உண்மையன்பால் கடவுளை கருத்தில் கருத வேண்டும்.
- ❖ சுத்த சன்மார்க்கப் பயனாகிய மரணமில்லா பெருவாழ்வு பெறுதல்.

அன்பர்களே!!

வள்ளலாரின் மார்க்கத்தில் கருத்தில் கருதப்பட வேண்டிய கடவுள் ஒருவரே!

அதாவது தெய்வம் ஒன்றே! அதாவது தனிக்கடவுள்!

ஆக, வள்ளலார் மார்க்கத்தில் உரியவர்களாக்கிக் கொண்ட நமக்கு நம் அறிவில் பதிய வைக்க வேண்டியது:- கடவுள் ஒருவரே!

அன்பர்களே! இதை உள்ளத்தில் ஏற்றிக் கொண்டே ஆக வேண்டும்.

அடுத்து,

இந்த மூன்றாம் நாள் வகுப்பில் காண இருப்பது யாதெனில்:

உண்மைக் கடவுளின் நிலை காண நாம் என்னச் செய்ய வேண்டும்?

எந்தொரு மார்க்கத்திலும் கடவுளின் நிலை காண்க என அறிவுறுத்தப் படவில்லை. கடவுள் இவர்களே என வெளிப்படுத்தி, அவர்களை வணங்கி, ஆச்சாரங்கள் மூலமாக வழிபாடு செய்ய அவற்றில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் சுத்த சன்மார்க்கத்தில் கருத்தில் கருதப்பட்டுள்ள அந்த ஓர் உண்மைக் கடவுளின் நிலையை ஒவ்வொருவரும் காண



வேண்டும். என் மார்க்கத்தில் அக அனுபவமே உண்மை என்கிறார் வள்ளலார்.

ஆக,

வள்ளலாரின் மார்க்கத்தில் அருள் பெறுவதற்கு நம் அறிவில் கடவுளின் நிலையை அறிந்தே ஆக வேண்டும்.

வள்ளலார், அவர்தம் இடைவிடாத நன்முயற்சியில், சத்திய அறிவில் கடவுளின் நிலையை கண்டார்கள். அங்ஙனம் கண்ட அந்த உண்மை கடவுள் குறித்து நமக்கு அகவல், பாடல்கள் மற்றும் குறிப்புகள் மூலம் சொல்லியுள்ளார்கள்.

தான் கண்டது போல் எல்லாரும் கடவுளின் உண்மை நிலையை காணச் சொல்கிறார் வள்ளலார். எனவே தான் வள்ளலார் தன் மார்க்கத்திற்கு சமயங்கள், மதங்கள், மார்க்கங்களை எக்காலத்தும் முக்கியத் தடைகளாக அறிவித்து உள்ளார்கள்.

நிற்க! வள்ளலார் அவர்தம் அறிவில் கண்டு வெளிப்படுத்திய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைத்தான் நாம் ஒவ்வொருவரும் காண்போம். ஏனென்றால் கடவுள் ஒருவரே. ஆனால் வள்ளலார் அறிவித்த, அனுபவித்தில் கண்ட ஆண்டவரின் உண்மை மற்றும் அவர் பெற்ற அருள் அவருக்கே அன்றி நமக்கு இல்லை என அறிதல் வேண்டும். நம் முயற்சியில் நம் அறிவில் காணாமல் நாம் கடவுளின் அருளைப் பெறவே முடியாது. இது சத்தியம்.

(என்ன அன்பர்களே! புரியுது ... ஆனா...? என்ன புரியவில்லையா?)

இந்த உண்மையில் நம்மை தெளிவு படுத்தாமல், நாம் மேல் விசாரணைக்கு செல்ல முடியாது. அதாவது, ஒவ்வொருவரும் நல்ல விசாரணை இதில் செய்தே ஆக வேண்டும்.

நல்ல விசாரணையில் கடவுளின் உண்மை (நிலை) அறிதல் வேண்டும்.

இந்த தனி வழியை கண்டு அதில் நன்முயற்சி செய்து உண்மை கடவுளை காண்கிறார் வள்ளலார். இந்த வழியை அங்ஙனமே ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமையால் நமக்கெல்லாம் அறிவித்த மகானே நம் வள்ளலார். வள்ளலாரிடம் வெளிப்பட்ட இந்த கருணைப்போல் எவரிடமும் வெளிப்படவில்லை.

அதனாலே தான் ஆண்டவர் தன் இயலையே வள்ளலாருக்கு அருளுகிறார்கள்.

அன்பர்களே!

பாருங்கள் நம் அய்யாவின் கைகளை.

கடவுளின் அருள் பெற்றாலும் மற்றவர்களைப் போல் ஆசிர்வாதம் பண்ணாமல் அவர் இருக்கும் நிலையை.. காரணம், தாம் என்னப் பெற்றோமே அதை எல்லோருமே பெறும் நிலையிலுள்ளது என்ற உண்மையை வள்ளலார் உணர்ந்திருந்ததே.

அய்யாவின் அருகிலேயே முழுஅன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான சிலர் இருந்தார்கள். அதில் ஒருவர் திரு கல்பட்டு அய்யா. வள்ளலார் பெற்றது போல் பெரும்பயனாகிய மரணமில்லா பெருவாழ்வை அவர் ஏன் பெறவில்லை.? அல்லது வள்ளலாரின் நம்பிக்கைக்கும் அன்பிற்கும் பாத்தியப்பட்டிருந்த அவருக்கு வள்ளலார் ஏன் அந்த பயனை கொடுக்கவில்லை. கல்பட்டு அய்யா இறந்தார்கள். அவரின் சமாதி தருமச்சாலை அருகில் உள்ளது. (இதை நம் விசாரணைக்கு தான் எடுக்கிறோமே அன்றி எந்தொரு பெரியவர்களை சான்றோர்களை குறை கூறுவதாக எடுக்கக் கூடாது. அவரி(களி)ன் அன்பு,பணிவு,கருணைக்கு நாம் சிறிதும் அருகதையாக மாட்டோம்.) இதை நாம் எதற்காக குறிப்பிடுகிறோம் என்றால் வள்ளலார் பெற்ற மரணமில்லா பெருவாழ்வை நாமும் பெற வேண்டுமானால் நம் அய்யா (வள்ளலார்) என்ன செய்தார்களோ அல்லது எங்ஙனம் நம்மை செய்ய சொல்கிறார்களோ அங்ஙனம் செய்தாலன்றி கைக்கூடாது. இது சத்தியம்.

எத்தனை அறிஞர்கள், சான்றோர்கள்,ஞானிகள் இருந்தார்கள். அவர்களால் சுத்த சன்மார்க்கம் குறித்து பல உரை நூல்கள், உபதேசங்கள், நமக்கு கிடைத்துள்ளன. நமக்கு அவை மிகப் பயனுள்ளதாக இருக்கின்றன. ஆனால் அவர்கள் வள்ளலாரைப் போல் ஒளி தேகம் ஏன் பெறவில்லை.? இறந்தார்கள். சமாதியானர்கள். இன்றும் நம்மைச் சுற்றி எத்தனை அறிஞர்கள், சான்றோர்கள்,ஞானிகள் இருக்கிறார்கள். அவர்களால் பல நன்மைகள் நமக்கு உள்ளது. ஆனால் மூப்பு, பயம், துன்பம் அவர்களை வந்துடைகிறதே. இதுவே நாளை நமக்கும்....

"தன்னைப் போல் எல்லாரும் பெறக்கூடியதாக உள்ளது" என சத்தியம் செய்கிறார் நம் வள்ளலார். சாகாதவனே சுத்த சன்மார்க்கி என்கிறார்கள்.


அப்படியென்றால் என்ன தான் செய்வது??

நாம் வள்ளலாரின் மீதும் அவர்தம் வழியின் மீதும் முழு நம்பிக்கை கொண்டுள்ளவர்கள்.

எனவே, இன்றே பயிற்சியை தொடங்குவோம்.

அன்பர்களே!

வள்ளலார் ஒருவர் மட்டுமே அன்று தனியாக இருந்து நல்ல விசாரணை செய்து உண்மைக் கடவுளைக் கண்டார்கள் அவ்வழியை அங்ஙனமே நமக்கு வெளிப்படுத்தியுள்ளார்கள். இன்று அவ்வழியில் செல்லும் பாக்கியத்தை நாம் பெற்றுள்ளோம். வள்ளலாரின் துணையும் கிடைத்துள்ளது என்பதை அறிக.

வள்ளலார் குறிப்பிட்டுள்ள ஒழுக்கத்தை நிரப்பிக் கொண்டவர்களாக நாம் இங்கு இருந்தோம் என்றால், நமக்கு அனைத்தையும் சொல்லிக் கொடுக்க வள்ளலார் வருவது சத்தியம். நம் வள்ளலார் அனைத்தையும் விளக்கமாக தெரிவிக்கிறார்கள். தகுதியாக வருபவர்கள் உள்ளத்தில் வள்ளலார் வெளிப்படுகிறார். வெளிப்படுவார்.

இது சத்தியம். இது சத்தியம்.

இன்றைய வகுப்பு முடிந்தது. அடுத்த வகுப்பில் நம்மை தகுதியாக்கும் ஒழுக்கம் குறித்து காண்போம். ------- அன்புடனும் பணிவுடனும் ஏபிஜெ.அருள்.

## பயிற்சி வகுப்பு நாள் 4 : நல்ல விசாரணை

வகுப்பு உறுப்பினர்கள் எல்லோருக்கும் எனது பணிவான வணக்கங்கள்.

"இங்கு மற்றவைகளை உன்னி அவலமடைந்து நில்லாமல், சர்வ சித்தியுடைய கடவுள் ஒருவருண்டென்று அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து, பூரண சித்தியைப் பெற வேண்டுவது சன்மார்க்கக் கொள்கை." கொள்கை அடிப்படையில் நமது வகுப்புகள் தொடரட்டும்.

எனக்கு ஆதரவு அளித்த அளித்துக்கொண்டியிருக்கிற சான்றோர்கள், பெரியவர்கள், புதியவர்கள் பலர் குறிப்பாக இளைஞர்கள், இளைஞிகள், மற்றும் அயல்நாடுகள் பர்மா, அமெரிக்கா,

துபாய், சிங்கப்பூர், மலேசியா, லண்டன், அமுதாபி, சிலோன் போன்ற பல நாட்டிலிருந்து அன்பர்கள் மற்றும் மிகப்பெரியவர்கள் பலர் எனக்கு தொலைப்பேசி, மின்னஞ்சல், ஸ்கைப் மூலம் தொடர்புக் கொண்டு நல்ல விசாரணை வகுப்பு தொடர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். நான் அவர்களிடம் மிகத்தெளிவாக தெரிவித்தது யாதெனில்: "நான் வள்ளலார் நெறியை அறிந்து, அனுபவித்து சொல்லவில்லை. தெரிந்ததை, அங்ஙனமே உள்ளது உள்ளபடியாக என் உள்ளத்தில் நிறுத்தி கொள்ளும் போது, என்னைப் போல் விருப்பம் கொண்ட ஒத்த அறிவு, ஒழுக்கம், கருத்து உடையவர்களிடம் இதைப் பகிர்ந்துக் கொள்ளும் விருப்பமே இந்த வகுப்புகள்.

நாம் எவரையும் தாழ்வாக பார்க்கக்கூடாது. பார்க்க முடியாது. காரணம், அந்த தாழ்வான நிலையிலிருந்து தான் அதாவது அஞ்ஞானம், அறியாமையிலிருந்து தான் நான் மற்றும் எல்லாருமே வந்தோம். வருகிறோம் என்பதை அறிதல் வேண்டும். எனது தூய்மையான எண்ணத்தை நீங்கள் முழுமையாக புரிந்துகொண்டது என் பாக்கியமே.

இந்த அரிய வாய்ப்பை எனக்கு அளித்த திருவருட்பிரகாச வள்ளலாருக்கு நன்றிகள்.

நமது வகுப்புக்கு எல்லாம் வல்ல நம் வள்ளலார் என்றும் ஆசிரியராக வந்திருந்து, நாம் எல்லாரும் உண்மை வழியை (சுத்த சன்மார்க்கத்தை) தெரிந்து கொள்ள செய்விப்பார். இது சத்தியம். இது சத்தியம்.

அன்பர்களே,

இந்த வகுப்பு நமக்கு மிக மிக முக்கியம்.

இதை கருத்தில் கொண்டால் வள்ளலார் கண்ட மார்க்கத்தின் கொள்கையை நாம் தெரிந்தவர்களாகுவோம். கண்டிப்பாக இந்த சுத்த சன்மார்க்க பயிற்சியில் நமக்கு திருவருள் கைக்கூடும்.

இன்றைய நம் வகுப்பு பயிற்சிக்கு ஆதாரமாக எடுத்துள்ளவை: உரைநடைப்பகுதி, முதல் விண்ணப்பம், மகாபேருபதேசம்.



சுத்த சன்மார்க்க சாதனம் இரண்டு வகைப்படும்:

பரோபகாரம், சத்விசாரம்,

பரோபகாரம் என்பது தேகத்தாலும், வாக்காலும், திரவியத்தாலும் உபகாரஞ் செய்வது. சத்விசாரம் என்பது நேரிடாத பட்சத்தில் ஆன்மநேய சம்பந்தமான தயாவிசாரத்தோடு இருப்பது.

கடவுளது புகழை விசாரித்தல், ஆன்மாவின் உண்மையை விசாரித்தல், தன் சிறுமையைக் கடவுளிடத்தில் விண்ணப்பித்தல்.

இந்த மார்க்கத்தால்தான் சுத்தமாதி மூன்று தேகங்களைப் பெறமுடியும் பெற்றே ஆக வேண்டும்.

அன்பர்களே!

நம் சிறுமைகள் எவை? நமக்கு தெரிந்தும் மற்றும் தெரியாமலேயே நம்மிடம் ஒட்டியுள்ள சிறுமைகளில் முக்கியமானது.

சாதி,குலம்,சாத்திர சடங்குகள், குரோதம், காமம் முதலியவை.

நாம் சொல்லலாம் என்னிடம் இவை இல்லைஎன்று. (இது அவரவர் முடிபுக்கு அறிவுக்கு விட்டுவிடுவோம்).

இந்த வகுப்பில் "கட்டுப்பாட்டு ஆச்சாரங்களை" குறித்தும், ஒழுக்கத்தை நிரப்பிக் கொள்வது குறித்தும் முடிந்த வரை நம் வள்ளலாரின் சத்திய வாக்கியங்களைக் கொண்டு காண உள்ளோம்.

நம் அய்யா சொல்கிறார்கள் இதோ: (பக்கம்:418):

''தத்துவவொழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தொழிலொழுக்கம் பற்றி ஜாதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு ஜாதியேற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள். அவையாவன: ஜாதியாசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்தாசாரம், சாஸ்திராசாரம் முதலிய ஆசாரங்கள். ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்தசிவசன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால், மேற்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடுமேயல்லது, இல்லாவிடில் கூடாது"

ஆக நம்மிடம் ஒழிந்து போக வேண்டிய ஆச்சாரங்களில் முக்கியமானவை:

1.ஜாதியாசாரம், 2.குலாசாரம், 3.ஆசிரமாசாரம், 4.லோகாசாரம், 5.தேசாசாரம், 6.கிரியாசாரம், 7.சமயாசாரம், 8.மதாசாரம், 9.மரபாசாரம், 10.கலாசாரம், 11.சாதனாசாரம், 12.அந்தாசாரம், 13.சாத்திராசாரம்,

இந்த ஆசாரங்களொழிந்து, சுத்த சன்மார்க்க சத்திய ஞானாசாரம் ஒன்றே இது தொட்டு வழங்க வேண்டும்.

பெருந்தயவு வடிவமாக இருக்க வேண்டும். சத்தியஞானாசாரமாகிய பொது நோக்கம் வருவித்துக்கொள்ளல் வேண்டும்.

சாதி, குலம், ஆசிரமம், லோகம், தேசம், கிரியா, சமயம், மதம், மரபு, கலா, சாதனம், அந்தம், சாத்திரம் என்றால் என்ன?

ஆசாரம் என்றால் "வழக்கம்" எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜாதி | : | வருணம், இனம் (இனப்பழக்க வழக்கங்கள்) |
| 2. | குலம் | : | குடி (வீடு) (குலப்படியான வழக்கம், வீட்டு முறை) |
| 3. | ஆசிரமம் | : | ஆச்சிரமம். வாழ்க்கை முறை, உறைவிடம் |
| 4. | லோகம் | : | உலகம் (உலகத்தாரொழுக்கம்- உலக பழக்க வழக்கம்) |
| 5. | தேசம் | : | நாடு (நாட்டு வழக்கம்) |
| 6. | கிரியை | : | செய்கை - உபாயம் - சடங்கு விதி (உபாய வழி வழக்கம்) |
| 7. | சமயம் | : | சைவம், வைணவம், பௌத்துவம் போன்ற சமயங்களின் வழக்கங்கள் |
| 8. | மதம் | : | வேதம், சித்தாந்தம் போன்ற மதங்களின் வழக்கங்கள். |
| 9. | மரபு | : | பாரம்பரியம், பழமை, (பழமையான, பாரம்பரியமான வழக்கம்) |
| 10. | கலா | : | பண்பாடு ( பண்பாடு, மொழி பழக்க வழக்கம்) |
| 11. | சாதனம் | : | கருவி, சின்னம், பயிற்சி (இவைகளின் வழக்கம்) |



| | | | |
|---|---|---|---|
| 12 | அந்த | : | உள்ளடங்கிருத்தல் (முடிவாக மரணமே என்ற அஞ்ஞான வழக்கம் முக்தி) |
| 13. | சாத்திரம் | : | சமய, மத நூல்கள் அடிப்படையில் பழக்க வழக்கங்கள். |

ஆச்சாரங்களை விட்டொழிக்க வேண்டும். விட்டொழிக்காமல் கருணையை விருத்தி செய்ய முடியாது. கருணை நம்மிடம் விருத்தியாகவில்லை என்றால் உண்மை நம் உள்ளத்தில் பதியாது.

இதை பல இடங்களில் உறுதி செய்யலாம்.

வள்ளாலாரின் சத்திய சிறு விண்ணப்பம்: பக்கம் 556 கடைசி பாரா.

"எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாச்சார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்."

மீண்டும் வாசியுங்கள்: "......முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும்,....."

இங்கு, சங்கற்பம் என்றால்- மனோ நிச்சயமான கொள்கை, கருத்து

விகற்பம் என்றால்:- மனோ மாறுபாட்டிலுள்ள வழக்கங்கள்.

அன்பர்களே! இங்ஙனம் வள்ளலார் சொல்லியிருக்க, மற்ற சமய,மத மார்க்கங்களின் கொள்கை மற்றும் உலக பழக்க வழக்கங்கள் எல்லாம் நமக்கு எக்காலத்தும் முக்கியத்தடைகளா இல்லையா?

இன்னொரு இடத்திலும் இதை உறுதி செய்வோம். பக்கம் : 410 அதுவும் திருக்கதவு திருக்காப்பிடுவதற்கு முந்தின இரவில் 30.1.1874ல் நம் வள்ளலார் கீழ் வருமாறு சொல்கிறார்கள்:

"இதுகாறும் என்னொடு நீங்கள் பழகியும் சன்மார்க்க ஒழுக்கம் இன்னதென்று தெரிந்து கொள்ளவில்லை." யாதெனில், இங்கு இருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள் எல்லாப்

பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள் என்ற திருவார்த்தை அதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாக உடையது கடமை."

அன்பர்களே! இந்த உண்மை நம் வள்ளலார் சொன்னாலும் நாம் கடைப்பிடிக்கிறோமா? சிந்தியுங்கள். விசாரியுங்கள்?

(அன்பர்களே! உண்மையாக நான் இந்த இடத்தில் அழுகிறேன். கண்ணீர் வழிகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு நெறி குறித்து ஆடியோ பதிவு செய்யப்பட்டது. இந்த வரியை நான் வாசித்த போது இதே போல் அழுதேன். ஏங்கி ஏங்கி அழுதேன். உள்ளத்தில் ஓர் உணர்ச்சி உண்டாகியது. பதிவு சில மணி நேரம் தடைப்பட்டது).

பேருபதேசத்தில் ஒரு சத்திய வாக்கியம்: அது இதோ:

பக்கம்: 475: "உண்மை சொல்ல வந்தனனே என்று

உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்துக் கொள்வாரில்லை."

நாம் அந்த உண்மையை இன்று இந்த வகுப்பில் தெரிந்து கொண்டோம். நம் அய்யாவிடம் இதை உரக்க சொல்லுங்கள்.

அன்பர்களே! உண்மையை தான் தெரிந்துக் கொண்டுள்ளோம் என்பதினால் சுத்த சன்மார்க்கப் பயன் கிட்டாது. அந்த உண்மையை நாம் அறிய வேண்டும். அகத்தில் அனுபவிக்க வேண்டும். என் மார்க்கம் அறிவு மார்க்கம். என் மார்க்கம் உண்மையறியும் மார்க்கம். என் மார்க்கத்தில் அக அனுபவமே உண்மை (பக்கம்439) என்கிறார் நம் வள்ளலார்.

பக்கம்: 419 "...ஆச்சாரங்களை விட்டொழித்துப் பொது நோக்கம் வந்தாலொழிய, காருண்ணியம் விருத்தி ஆகிக் கடவுள் அருளைப் பெற்று அனந்த சித்தி வல்லபங்களைப் பெறமுடியாது..."

அன்பர்களே! நம் மார்க்கத்தில் எங்கும் பரிபூரணராக நிறைந்துள்ள ஓர் உண்மைக் கடவுளை நம் ஒவ்வொருவரும் நன்முயற்சியில் உள்ளத்தில் (அகத்தில்) காணச் சொல்வதே வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம்.

ஆக, அந்த உண்மைக் கடவுள் நிலை பார்ப்பதற்கு முன்பே நாம் எங்ஙனம் உண்மைக் கடவுள் நிலைக் குறித்து வியம்ப முடியும்? நம் வள்ளலார் அவர் கண்ட உணமையை பாடல்கள், விண்ணப்பங்கள், உபதேசம் மூலமாக பதிவு செய்துள்ளார்கள்.



ஆனால் நாமோ அதை மனப்பாடம் பண்ணிக்கொண்டு கடவுள் நிலை இங்ஙனமே என்று நம்மிடையே விவாதிக்கிறோம். அன்பர்களே! உண்மைக் கடவுளின் நிலை கண்டவுடனே நமக்கு பிணி, மூப்பு, துன்பம் ஏது? பிணி,மூப்பு,பயம்,துன்பம் நம்மிடம் உள்ளது என்றால் நாம் இன்னும் கடவுளின் நிலை காணாதவர்களே! அப்படித்தானே அன்பர்களே!

அன்பர்களே! இது ஏதோ ஒரு கட்டுரை என நினைத்து படித்தால் பிரோயஜனம் ஏற்படாது. நாம் ஒவ்வொருவரும் உள் அழுந்தி, சிந்தித்து, சிந்தித்தலை விசாரிக்க வேண்டும். இதுவே சுத்த சன்மார்க்கத்தின் சங்கல்பம் ஆகும். பயிற்சி வகுப்புகள் முற்றும்.

-- அன்புடன் ஏபிஜெ அருள்.

## 28 பாசுரப் பாடல்கள்

1873ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் வள்ளலார் கூறியது யாதெனில்; ".....உங்களுடைய காலத்தை வீணிற்கழிக்காமல் 'நினைந்து நினைந்து'என்னும் தொடக்கமுடைய 28 பாசுரப்பாடல்களில் கண்டபடி தெய்வ பாவனையை தீபத்தில் செய்யுங்கள்".

**வள்ளலாரின் முடிபான கடவுள் கொள்கையையும் அவரின் 'உண்மை பொது நெறியையும்' உள்ளது உள்ளபடி நாம் அறிய அவர் இயற்றிய 28 பாசுரப்பாடல்களை ஊன்றி வாசிக்க வேண்டும்.**

**இது வள்ளலாரின் வேண்டுகோள் மற்றும் கட்டளை என அறிக.**

### 28 பாசுரம் அடங்கிய பாடல்கள்

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந்து ஊற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதம்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்

புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே. 1

புகுந்தருணம் இதுகண்டீர் நம்மவரே நான்தான்
புகல்கின்றேன் என்மொழிஓர் பொய்மொழிஎன் னாதீர்
உகுந்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும்
உடைமைகளும் உலகியலும் உற்றதுணை அன்றே
மிகுந்தசுவைக் கரும்பேசெங் கனியேகோற் தேனே
மெய்ப்பயனே கைப்பொருளே விலையறியா மணியே
தகுந்ததனிப் பெரும்பதியே தயாநிதியே கதியே
சத்தியமே என்றுரைமின் பத்தியொடு பணிந்தே. 2

பணிந்துபணிந் தணிந்தணிந்து பாடுமினோ உலகீர்
பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே
துணிந்துவந்த வேதாந்த சுத்தஅனு பவமே
துரியமுடி அனுபவமே சுத்தசித்தாந் தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே சமரசசன் மார்க்க
சத்தியமே இயற்கையுண்மைத் தனிப்பதியே என்று
கனிந்துளத்தே கனிந்துநினைந் துரைத்திடில்அப் பொழுதே
காணாத காட்சிஎலாம் கண்டுகொளல் ஆமே. 3

கண்டதெலாம் அநித்தியமே கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யேநீர் களித்ததெலாம் வீணே
உண்டதெலாம் மலமேஉட் கொண்டதெலாம் குறையே
உலகியலீர் இதுவரையும் உண்மையறிந் திலிரே
விண்டதனால் என் இனிநீர் சமரசசன் மார்க்க
மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து மெய்ப்பொருள்நன் குணர்ந்தே
எண்டகுசிற் றம்பலத்தே எந்தைஅருள் அடைமின்
இறவாத வரம்பெறலாம் இன்பமுறலாமே. 4

இன்புறலாம் எவ்வுலகும் ஏத்திடவாழ்ந் திடலாம்
எல்லாம்செய் வல்லசித்தி இறைமையும்பெற் றிடலாம்
அன்புடையீர் வம்மின் இங்கே சமரசசன் மார்க்கம்
அடைந்திடுமின் அகவடிவிங் கனகவடி வாகிப்
பொன்புடைநன் கொளிர்ஒளியே புத்தமுதே ஞான
பூரணமே ஆரணத்தின் பொருள்முடிமேல் பொருளே
வன்புடையார் பெறற்கரிதாம் மணியேசிற் சபையின்



மாமருந்தே என்றுரைமின் தீமையெலாம் தவிர்ந்தே. 5

தீமைஎலாம் நன்மைஎன்றேதிருஉளங்கொண் டருளிச்
சிறியேனுக் கருளமுதத் தெளிவளித்த திறத்தை
ஆமயந்தீர்த் தியற்கைஇன்ப அனுபவமே மயமாய்
அம்பலத்தே விளங்குகின்றஅருட்பெருஞ்ஜோ தியைஓர்
ஓமயவான் வடிவுடையார் உள்ளகத்தே நிறைந்த
ஒருபொருளைப் பெருங்கருணை உடையபெரும் பதியை
நாமருவி இறவாத நலம்பெறலாம் உலகீர்
நல்லஒரு தருணம்இது வல்லைவம்மின் நீரே. 6

நீர்பிறரோ யான்உமக்கு நேயஉறவலனோ
நெடுமொழியே உரைப்பன் அன்றிக்கொடுமொழிசொல் வேனோ
சார்புறவே அருளமுதம் தந்தெனைமேல் ஏற்றித்
தனித்தபெருஞ் சுகம்அளித்த தனித்தபெரும் பதிதான்
சீர்பெறவே திருப்பொதுவில் திருமேனி தரித்துச்
சித்தாடல் புரிகின்றதிருநாள்கள் அடுத்த
ஓர்புறவே இதுநல்ல தருணம்இங்கே வம்மின்
உலகியலீர் உன்னியவா றுற்றிடுவீர் விரைந்தே. 7

விரைந்துவிரைந் தடைந்திடுமின் மேதினியீர் இங்கே
மெய்மைஉரைக் கின்றேன்நீர் வேறுநினை யாதீர்
திரைந்துதிரைந் துளுத்தவரும் இளமைஅடைந் திடவும்
செத்தவர்கள் எழுந்திடவும் சித்தாடல் புரிய
வரைந்துவரைந் தெல்லாஞ்செய் வல்லசித்தன் தானே
வருகின்றதருணம்இது வரம்பெறலாம் நீவிர்
கரைந்துகரைந் துளம்உருகிக் கண்களில்நீர் பெருகிக்
கருணைநடக் கடவுளைஉட் கருதுமினோ களித்தே. 8

களித்துலகில் அளவிகந்த காலம்உல கெல்லாம்
களிப்படைய அருட்ஜோதிக் கடவுள்வரு தருணம்
தெளித்திடும்எத் தருணம்அதோ என்னாதீர் இதுவே
செத்தவரை எழுப்புகின்றதிகழ்தருணம் உலகீர்
ஒளித்துரைக்கின்றேன் அலன்நான் வாய்ப்பறைஆர்க் கின்றேன்
ஒருசிறிதும் அச்சமுறேன் உள்ளபடி உணர்ந்தேன்
அளித்திடுசிற் றம்பலத்தென் அப்பன் அருள் பெறவே

ஆசைஉண்டேல் வம்மின்இங்கே நேசமுடையீரே. 9

ஆசைஉண்டேல் வம்மின் இங்கே அருட்ஜோதிப் பெருமான்
அம்மையுமாய் அப்பனுமாய் அருளும்அரு ளாளன்
ஏசறநீத் தெனை ஆட்கொண் டெண்ணியவா றளித்தான்
எல்லாஞ்செய் வல்லசித்தன் என்னுயிரில் கலந்தான்
தேசுடைய பொதுவில் அருள் திருநடனம் புரியத்
திருவுளங்கொண் டெழுந்தருளும் திருநாள்இங் கிதுவே
மோசஉரை எனநினைத்து மயங்காதீர் உலகீர்
முக்காலத் தினும்அழியா மூர்த்தம் அடைந் திடவே. 10

அடைந்திடுமின் உலகீர்இங் கிதுதருணம் கண்டீர்
அருட்ஜோதிப் பெரும்பதிஎன் அப்பன்வரு தருணம்
கடைந்தனித் திருவமுதம் களித்தருத்தி எனக்கே
காணாத காட்சிஎலாம் காட்டுகின்றதருணம்
இடைந்தொருசார் அலையாதீர் சுகம்என்னைப்போல் பெறுவீர்
யான்வேறு நீர்வேறென் றெண்ணுகிலேன் உரைத்தேன்
உடைந்தசம யக்குழிநின் றெழுந்துணர்மின் அழியா
ஒருநெறியாம் சன்மார்க்கத் திருநெறிபெற் றுவந்தே. 11

திருநெறிஒன் றேஅதுதான் சமரசசன் மார்க்கச்
சிவநெறிஎன் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனையாட்கொண் டருளமுதம் அளித்து
வல்லபசத் திகளெல்லாம் வழங்கியஓர் வள்ளல்
பெருநெறியில் சித்தாடத் திருவுளங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருணம் இதுவே
கருநெறிவீழ்ந் துழலாதீர் கலக்கடை யாதீர்
கண்மையினால் கருத்தொருமித் துண்மைஉரைத் தேனே. 12

உண்மையுரைக் கின்றேன்இங் குவந்தடைமின் உலகீர்
உரைஇதனில் சந்தேகித் துளறிவழி யாதீர்
எண்மையினான் எனநினையீர் எல்லாஞ்செய் வல்லான்
என்னுள் அமர்ந் திசைக்கின்றான் இதுகேண்மின் நீவிர்
தண்மையொடு சுத்தசிவ சன்மார்க்க நெறியில்
சார்ந்துவிரைந் தேறுமினோ சத்தியவாழ் வளிக்கக்
கண்மைதரும் ஒருபெருஞ்சீர்க் கடவுள்எனப் புகலும்
கருணைநிதி வருகின்றதருணம்இது தானே. 13



தானேதான் ஆகிஎலாம் தானாகி அலனாய்த்
தனிப்பதியாய் விளங்கிடும்என் தந்தையைஎன் தாயை
வானேஅவ் வான்கருவே வான்கருவின் முதலே
வள்ளால்என் றன்பரெலாம் உள்ளாநின் றவனைத்
தேனேசெம் பாகேஎன் றினித்திடுந்தெள் ளமுதைச்
சிற்சபையில் பெருவாழ்வைச் சிந்தைசெய்மின் உலகீர்
ஊனேயும் உடலழியா தூழிதொறும் ஓங்கும்
உத்தமசித் தியைப்பெறுவீர் சத்தியம்சொன் னேனே. 14

சத்தியவே தாந்தமெலாம் சித்தாந்தம் எல்லாம்
தனித்தனிமேல் உணர்ந்துணர்ந்தும் தனையுணர்தற் கரிதாய்
நித்தியசிற் சபைநடுவே நிறைந்துநடம் புரியும்
நித்தபரி பூரணனைச் சித்தசிகா மணியை
அத்தகையோர் பெரும்பதியை அருமருந்தை அடியேன்
ஆவியைஎன் ஆவியிலே அமர்ந்ததயா நிதியைச்
சித்தியெலாம் எனக்களித்த சிவகதியை உலகீர்
சிந்தைசெய்து வாழ்த்துமினோ நிந்தைஎலாம் தவிர்ந்தே. 15

நிந்தையிலார் நெஞ்சகத்தே நிறைந்தபெருந் தகையை
நிலையனைத்தும் காட்டிஅருள் நிலைஅளித்த குருவை
எந்தையைஎன் தனித்தாயை என்னிருகண் மணியை
என்உயிரை என்உணர்வை என்அறிவுள் அறிவை
சிந்தையிலே தனித்தினிக்கும் தெள்ளமுதை அனைத்தும்
செய்யவல்ல தனித்தலைமைச் சிவபதியை உலகீர்
முந்தைமல இருட்டொழிய முன்னுமினோ கரண
முடுக்கொழித்துக் கடைமரண நடுக்கொழித்து முயன்றே. 16

முயன்றுலகில் பயன்அடையா மூடமதம் அனைத்தும்
முடுகிஅழிந் திடவும்ஒரு மோசமும்இல் லாதே
இயன்றஒரு சன்மார்க்கம் எங்குநிலை பெறவும்
எம்மிறைவன் எழுந்தருளல் இதுதருணம் கண்டீர்
துயின்றுணர்ந்தே எழுந்தவர்போல் இறந்தவர்கள் எல்லாம்
தோன்றஎழு கின்றதிது தொடங்கிநிகழ்ந் திடும்நீர்
பயின்றறிய விரைந்துவம்மின் படியாத படிப்பைப்
படித்திடலாம் உணர்ந்திடலாம் பற்றிடலாம் சுகமே. 17

சுகமறியீர் துன்பம்ஒன்றேதுணிந்தறிந்தீர் உலகீர்
சூதறிந்தீர் வாதறிந்தீர் தூய்மையறின் திலிரே
இகம்அறியீர் பரம்அறியீர் என்னேநுங் கருத்தீது
என்புரிவீர் மரணம்வரில் எங்குறுவீர் அந்தோ
அகமறியீர் அனகமறிந் தழியாத ஞான
அமுதவடி வம்பெறலாம் அடைந்திடுமின் ஈண்டே
முகமறியார் போலிருந்தீர் என்னைஅறி யீரோ
முத்தரெலாம் போற்றும்அருட் சித்தர்மகன் நானே. 18

நான்உரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன்தன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள் நற்றருணம் இதுவே
வான்உரைத்த மணிமன்றில் நடம்புரிஎம் பெருமான்
வரவெதிர்கொண் டவன்அருளால் வரங்கள்எலாம் பெறவே
தேன்உரைக்கும் உளம்இனிக்க எழுகின்றேன் நீவிர்
தெரிந்தடைந்தென் உடன்எழுமின் சித்திபெறல் ஆகும்
ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையும் சுகத்தினைநீர் தான்அடைதல் குறித்தே. 19

குறித்துரைக்கின் றேன் இதனைக் கேண்மின் இங்கே வம்மின்
கோணும்மனக் குரங்காலே நாணுகின்றஉலகீர்
வெறித்தஉம்மால் ஒருபயனும் வேண்டுகிலேன் எனது
மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறுநினை யாதீர்
பொறித்தமதம் சமயம்எலாம் பொய்பொய்யே அவற்றில்
புகுதாதீர் சிவம்ஒன்றேபொருள்எனக்கண் டறிமின்
செறித்திடுசிற் சபைநடத்தைத் தெரிந்துதுதித் திடுமின்
சித்திஎலாம் இத்தினமே சத்தியம்சேர்ந் திடுமே. 20

சேர்ந்திடவே ஒருப்படுமின் சமரசசன் மார்க்கத்
திருநெறியே பெருநெறியாம் சித்திஎலாம் பெறலாம்
ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும் உறங்குதற்கும் உணர்ந்தீர்
உலகம்எலாம் கண்டிடும்ஓர் உளவைஅறிந் திலிர்ரே
வார்ந்தகடல் உலகறிய மரணம்உண்டே அந்தோ
மரணம்என்றால் சடம்எனும்ஓர் திரணமும்சம் மதியா
சார்ந்திடும்அம் மரணமதைத் தடுத்திடலாம் கண்டீர்
தனித்திடுசிற் சபைநடத்தைத் தரிசனஞ்செய் வீரே. 21



செய்தாலும் தீமைஎலாம் பொறுத்தருள்வான் பொதுவில்
திருநடஞ்செய் பெருங்கருணைத் திறத்தான்அங் கவனை
மெய்தாவ நினைத்திடுக சமரசசன் மார்க்கம்
மேவுகஎன் றுரைக்கின்றேன் மேதினியீர் எனைத்தான்
வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக்கொண் டிடுவேன்
மனக்கோணேன் மானம்எலாம் போனவழி விடுத்தேன்
பொய்தான்ஓர் சிறிதெனினும் புகலேன்சத் தியமே
புகல்கின்றேன் நீவிர்எலாம் புனிதமுறும் பொருட்டே. 22
பொருட்டலநும் போகம்எலாம் பொய்யாம்இங் கிதுநான்
புகலுவதென் நாள்தொறுநும் புந்தியிற்கண் டதுவே
மருட்டுலகீர் இருட்டுலகில் மடிவதழ கலவே
மரணமிலாப் பெருவாழ்வில் வாழவம்மின் இங்கே
பொருட்டிறஞ்சேர் சுத்தசிவ சன்மார்கக நிலையில்
பொருந்துமின்சிற் சபைஅமுதம் அருந்துமின்அன் புடனே
அருட்டிறஞ்சேர்ந் தெண்ணியவா றாடுமினோ நும்மை
அடுப்பவரே அன்றிநின்று தடுப்பவர்மற் றிலையே. 23

மற்றறிவோம் எனச்சிறிது தாழ்த்திருப்பீர் ஆனால்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ
சற்றும்அதை நும்மாலே தடுக்கமுடி யாதே
சமரசசன் மார்க்கசங்கத் தவர்கள் அல்லால் அதனை
எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்
இல்லைகண்டீர் சத்தியமீ தென்மொழிகொண் டுலகீர்
பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டருளம்
பலப்பற்றேபற்றுமினோ என்றும்இறவீரே. 24

இறந்தவரை எடுத்திடும்போ தரற்றுகின்றீர் உலகீர்
இறவாத பெருவரம்நீர் ஏன்அடைய மாட்டீர்
மறந்திருந்தீர் பிணிமூப்பில் சம்மதமோ நுமக்கு
மறந்தும்இதை நினைக்கில்நல்லோர் மனம்நடுங்கும் கண்டீர்
சிறந்திடுசன் மார்க்கம்ஒன்றேபிணிமூப்பு மரணம்
சேராமல் தவிர்த்திடுங்காண் தெரிந்துவம்மின் இங்கே
பிறந்தபிறப் பிதில்தானே நித்தியமெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே. 25

உற்றமொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே
உறவன்அன்றிப் பகைவன்என உன்னாதீர் உலகீர்
கற்றவரும் கல்லாரும் அழிந்திடக்காண் கின்றீர்
கரணம்எலாம் கலங்கவரும் மரணமும்சம் மதமோ
சற்றும்இதைச் சம்மதியா தென்மனந்தான் உமது
தன்மனந்தான் கன்மனமோ வன்மனமோ அறியேன்
இற்றிதனைத் தடுத்திடலாம் என்னொடுசேர்ந் திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே. 26

சன்மார்க்கப் பெருங்குணத்தார் தம்பதியை என்னைத்
தாங்குகின்றபெரும்பதியைத் தனித்தசபா பதியை
நன்மார்க்கத் தெனைநடத்திச் சன்மார்க்க சங்கம்
நடுவிருக்க அருளமுதம் நல்கியநா யகனைப்
புன்மார்க்கர்க் கறிவரிதாம் புண்ணியனை ஞான
பூரணமெய்ப் பொருளாகிப் பொருந்தியமா மருந்தை
அன்மார்க்கம் தவிர்த்தருளி அம்பலத்தே நடஞ்செய்
அருட்பெருஞ்ஜோ தியைஉலகீர் தெருட்கொளச்சார் வீரே. 27

சார்உலக வாதனையைத் தவிர்த்தவர்உள் ளகத்தே
சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தமசற் குருவை
நேர்உறவே எவராலும் கண்டுகொளற் கரிதாம்
நித்தியவான் பொருளைஎலா நிலைகளுந்தான் ஆகி
ஏர்உறவே விளங்குகின்றஇயற்கைஉண்மை தன்னை
எல்லாம்செய் வல்லபத்தை எனக்களித்த பதியை
ஓர்உறவென் றடைந்துலகீர் போற்றிமகிழ்ந் திடுமின்
உள்ளம்எலாம் கனிந்துலகீர் உள்ளபடி நினைந்தே. 28.

## சுத்த சன்மார்க்க ஒழுக்கம்

திருவருட்பிரகாச வள்ளலார் 30.1.1874ல் சுத்தசன்மார்க்க ஒழுக்கம் குறித்து கூறியது.

“இதுகாறும் என்னொடு நீங்கள் பழகியும் சன்மார்க்க ஒழுக்கம் இன்னதென்று தெரிந்துக் கொள்ளவில்லை.” யாதெனில், இங்கு இருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள் எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள் என்ற திருவார்த்தை அதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாக உடையது கடமை.”